# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No**.62/2021 **Date**: 01.04.2025

**PW**1-மாதேஸ்வரி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதியின் அப்பா பெயர் மாரிமுத்துகவுண்டர். அவர் இறந்துவிட்டார். அவருக்கு 1ம் பிரதிவாதியும், இறந்து போன ஆனந்தனும் வாரிசுகள் என்றால் சரிதான். மாரிமுத்துகவுண்டர் இறந்த பிறகு 1ம் பிரதிவாதியும் ஆனந்தனும் அவரது சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்து 1, 3, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் 1, 3, 4 பிரதிவாதிகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் 5 முதல் 7 பிரதிவாதிகள் தேவையில்லாத தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுக்காக ஏற்படுத்தப்பட்டதால் தான் அவர்களையும் அதில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. பழனியப்பன் மகன் காத்தமுத்து என்பவரை தெரியும். அவர் அரசிராமணி வன்னியர் தெருவில் வசிக்கிறார் என்றால் சரிதான். 1, 3, 4 பிரதிவாதிகள் காத்தமுத்துவிடம் 16.04.2009ல் ரூ.1 லட்சம் கடன் வாங்கி கொண்டு தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதே தேதியில் காத்தமுத்து செல்லமுத்து மனைவி மாதேஸ்வரி என்பவருக்கு அதே சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். காத்தமுத்து கடன் தொகையை திரும்ப பெற்றுக்கொண்டு பொது அதிகார பத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்தத்தை 22.09.2011ல் இரத்து செய்து கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதே தேதியில் 1, 3, 4 பிரதிவாதிகள் மாதேஸ்வரியிடம் ரூ.1,20,000/- கடன் வாங்கி கொண்டு மீண்டும் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார் என்றால்

சரிதான். பின்பு 05.03.2014 ல் அந்த கடனை மாதேஸ்வரி திரும்ப பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தத்தை இரத்து செய்து கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதே தேதியில் மீண்டும் ரூ.3 லட்சம் கடனாக கொடுத்து ஒரு கிரைய ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றால் எனக்கு 2014 ல் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி தான் எனக்கு தெரியும் என்று சாட்சி தற்போது சொல்கிறார். அந்த ஒப்பந்தமும் 04.04.2016 ல் இரத்தாகிவிட்டது என்றால் சரிதான். அதே தேதியில் தான் நான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ரூ.6 லட்சம் கடனாக கொடுத்து வா.சா.ஆ.1 யை எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ற்கு 30 மாதங்கள் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. வா.சா.ஆ.1 ல் தரப்பினர்களாக உள்ள 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் ரூ.6 லட்சம் அசல், மற்றும் வட்டியுடன் சேர்த்து ரூ.8 லட்சத்தை என்னிடம் திருப்பி கொடுத்துள்ளார்கள் என்றாலும் மீதி வட்டி தொகையான ரூ.1,24,000/- மட்டும் 1 முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு செலுத்த வேண்டியுள்ளது என்றாலும் சரியல்ல. அவ்வாறு ரூ.8 லட்சம் பெற்றுக்கொண்டு தான் நான் வா.சா.ஆ.2 யை எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுக்காக எழுதப்பட்டதால் தான் நான் வா.சா.ஆ.2 யை எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதற்காக இரத்து செய்யப்பட்டது என்ற விவரம் வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு மீதி வட்டி பணம் செலுத்த வேண்டியிருந்ததால் தான் வா.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் வா.சா.ஆ.1 ல் உள்ள அதே வாசகங்கள் வா.சா.ஆ.3 ற்கும் போடப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் அதே தேதியில் ரூ.1,24,000/- வட்டிக்காக தனியாக ரூ.20/- முத்திரை தாளில் ஒரு கடன் பத்திரமும் 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் எழுதி வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அசல் ஆவணங்கள் என் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அசல் ஆவணங்கள் அடமானத்தில் இருந்ததால் தான் 30 மாதங்கள் கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டது. தாவா சொத்துக்கள் அடமானத்தில் இருந்ததாக சொல்வது பொய்

என்றால் சரியல்ல.  வா.சா.ஆ.3 தேதியில் இருந்து 2 வருடம் 4 மாதங்கள் வரை நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கடனுக்கு எழுதப்பட்டடதால் தான் நான் அவ்வளவு காலம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தங்கள் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டதால், தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

( 5 முதல் 7 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.)

Sd/-மாதேஸ்வரி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.